**பாடம் 3**

# சுவிசேஷ ஒருமைப்பாடு

**மனன வசனம்**

**நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். பிலிப்பியர் 2:2.**

**ஆராய்ச்சிக்கு**

**கலா 2:1-14; 1கொரி 1:10-13; ஆதி 17:1-21; யோவா 8:31-36; கொலோ 3:11.**

ஜூலை 8 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.



"ஒற்றுமையின்மையும் பிரிவினையும் சபையை வீழ்த்துவதற்கு பிசாசு பயன்படுத்தும் முக்கிய ஆயுதங்கள். கொள்ளைநோயைக் கண்டு ஓடுவதுபோல் அபிப்பிராயப் பேதங்களைத் தவிர்க்கவேண்டும்" என்று எச்சரிக்கிறார் புரொட்டஸ்டண்ட் சீர்திருத்தவாதி ஜான் கேல்வின்.

சத்தியத்தை விலைகொடுத்தா ஒற்றுமையைப் பாதுகாக்கவேண்டும்? புரொட்டஸ்டண்ட் சீர்திருத்தத்தின் தந்தை மார்ட்டின் லூதர். அவர், 'விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிப்பு' என்று சொன்னதைத் திரும்பப் பெறுமாறு கூறினார்கள். வோர்ம்ஸ் நீதிமன்றத்தில் அவர் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டபோது, அதைத் திரும்பப்பெற்றிருந்தால் என்னவாகியிருக்கும்?

"அந்தச் சீர்திருத்தவாதி ஒரு கணம் சமரசமாகியிருந்தாலும், சாத்தானும் அவன் சேனைகளும் வெற்றி பெற்றிருப்பார்கள். ஆனால், அவருடைய அசையா உறுதிதான் சபை விடுவிக்கப்படுவதற்கும், புதியதும் சிறந்ததுமான ஓர் யுகம் துவங்குவதற்கும் காரணமாயிருந்தது"- *GC, p. 166 .*

அப்போஸ்தலர்களின் ஒற்றுமையைக் கெடுப்பதற்குச் சிலர் முயன்று கொண்டிருந்தார்கள்; ஆனால், அதை நிலைநாட்டுவதற்குத் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்கிறார் பவுல். கலா 2:1- 14. ஒற்றுமை முக்கியமென்று அவர் நினைத்தபோதிலும், நற்செய்தியின் சத்தியத்தில் சமரசமாகி, அதைச் சாதிக்க அவர் தயாராக இல்லை. வேற்றுமையில் ஒற்றுமை அவசியம்தான். அதற்காக, நற்செய்தியை ஒருபோதும் பலியாக்கிவிடக்கூடாது.

2017, ஜூலை15 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## ஒற்றுமையின் முக்கியத்துவம்

***சபையில் ஒற்றுமை எவ்வளவு அவசியமென்று 1கொரி 1:10-13 இல் பவுல் சொல்கிறார்?***

'பவுல் கூறிய நற்செய்தி தேவன் கொடுத்தது அல்ல' என்று கூறப்பட்ட குற்றச்சாட்டை பவுல் மறுத்தார். பிறகு, தனக்கு எதிராகக் கூறப்பட்ட இன்னொரு குற்றச்சாட்டைப்பற்றி கலா 2:1, 2 இல் அவர் கூறுகிறார். பவுல் கூறிய நற்செய்தி, பேதுருவும் பிற அப்போஸ்தலர்களும் சொன்ன நற்செய்தியோடு ஒத்துப்போகவில்லையென்று கலாத்தியப் பொய்யர்கள் கூறினார்கள். பவுல் ஒரு மதத்துரோகி என்றார்கள்.

இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும்வகையில், தன் மனமாற்றத்திற்குப் பின் பதினான்கு வருடங்கள் கழித்து, தான் எருசலேமுக்குச் சென்றுவந்த சம்பவத்தைக் கூறுகிறார். அந்தப் பயணத்தின் கால விபரம் தெரியவில்லை. எனினும், பழங்காலத்தில் பயணம்செய்வது எளிதான காரியமல்ல. அந்தியோகியாவிலிருந்து தரைமார்க்கமாய், அவர் எருசலேமிற்குச் சென்றிருந்தால், முந்நூறு மைல்களை மூன்று வாரங்களாகக் கடந்திருக்கவேண்டும்; சகல இன்னல்களுக்கும் ஆபத்துகளுக்கும் ஆளாகியிருக்கக்கூடும். இத்தகைய இடையூறுகளுக்கு மத்தியிலும் பவுல் அந்தப் பயணத்தை மேற்கொண்டார். அதற்குக் காரணம், அப்போஸ்தலர்கள் அவரை அழைத்தது அல்ல; ஆவியானவர் ஏவினதுதான் காரணம். அங்குச் சென்றபோது, தான் கூறிவந்த நற்செய்தியை அப்போஸ்தலர்களிடம் பகிர்ந்துகொண்டார்.

ஏன் அப்படிச் செய்தார்? தான் பிரசங்கித்து வந்த காரியத்தில் கொஞ்சங்கூட அவருக்குச் சந்தேகம் இல்லை. பிறருடைய அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென்கிற நோக்கமும் அவரிடமில்லை. ஏனெனில், அதே நற்செய்தியைத்தான் பதினான்கு வருடங்களாக அவர் போதித்துவருகிறார். அவர்களுடைய அனுமதியோ, அங்கீகாரமோ அவருக்குத் தேவைப்படவில்லை; மாறாக, பிற அப்போஸ்தலர்களின் ஆதரவையும் ஊக்கத்தையும் அவர் உயர்வாக மதித்தார்.

எனவே, பவுல் கூறின நற்செய்தி தவறானதென்று சொல்லப்பட்ட குற்றச்சாட்டு, பவுலைமட்டுமல்ல, ஒட்டுமொத்த அப்போஸ்தலர்களின் ஒற்றுமையையும் சபையின் ஒற்றுமையையும் பாதித்தது. அப்போஸ்தலர்களின் ஒற்றுமை மிகமுக்கியம். புறஜாதியார் மத்தியில் பவுல் செய்துவந்த ஊழியம்குறித்து எருசலேமின் தாய்ச் சபையாருக்குக் கருத்துவேறுபாடு உண்டாகியிருந்தால், அது கடும் விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும். யூதக்கிறிஸ்தவர்களுக்கும் புறஜாதி கிறிஸ்தவர்களுக்கும் இடையே ஐக்கியம் நிலவாத பட்சத்தில், "கிறிஸ்துகுறித்து பாகுபாடு நிலவியிருக்கும். புறஜாதியாருக்கு நற்செய்தியைச் சொல்ல முழுமூச்சுடன் பவுல் மேற்கொண்ட, இனி மேற்கொள்ளவிருந்த முயற்சிகளும் வீணாகியிருக்கும்.

இன்று நம் சபையின் ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாக உள்ள காரியங்கள் யாவை? அத்தகைய காரியங்களை எவ்வாறு அகற்றலாம்? ஒற்றுமையைவிட அதிக முக்கியமானவை யாவை?

***பவுலோடு வாக்குவாதத்தில் ஈடுபட்ட யூதக் கிறிஸ்தவர்கள் சிலர் விருத்தசேதனத்தை முக்கியப் படுத்தியது ஏன்? ஆதி 17:1-22; கலா 2:3-5; 5:2,6; அப் 15:1,5. புறஜாதியாரும் விருத்த சேதனம் பண்ணப்படவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்த்ததைப்பற்றி நாம் ஏன் ஆச்சரியப்படத் தேவையில்லை?***

யூதத் தேசத்தின் தந்தையாகிய ஆபிரகாமோடு தேவன் செய்துகொண்ட உடன்படிக்கை உறவுக்கு அடையாளமாயிருந்தது விருத்தசேதனம். ஆபிரகாமின் சந்ததியில் ஆண்களுக்கு மட்டுமே விருத்தசேதனம்பண்ணினார்கள். ஆனாலும், தேவனோடு இந்த உடன்படிக்கை உறவுகொள்ள அனைவருமே அழைக்கப்பட்டார்கள். ஆதி 17 இல், விருத்தசேதனம் ஓர் அடையாளமாக ஆபிரகாமுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆபிரகாமுக்கு ஒரு மகனைத் தருவதாக தேவன் வாக்குக் கொடுத்திருந்தார். அதை நிறைவேற்ற தேவனுக்கு உதவுவதாக எண்ணி, எகிப்திய அடிமைப்பெண் ஒருத்தியைத் திருமணம்செய்து, ஒரு மகனைப் பெறுகிறார் ஆபிரகாம். அதன்பிறகுதான் அவருக்கு இந்த அடையாளம் கொடுக்கப்படுகிறது.

உடன்படிக்கைக்குப் பொருத்தமான ஓர் அடையாளம் விருத்தசேதனம். தேவன்தாமே வாக்குரைத்ததை மனிதனின் எவ்வளவு சிறப்பான திட்டத்தாலும் நிறைவேற்றமுடியாது என்பதற்கு அது ஓர் அத்தாட்சி. வெளிப்புற விருத்தசேதனம் இருதயத்தின் விருத்தசேதனத்திற்கு அடையாளமாயிருக்கிறது. உபா 10:16; 30:6; எரே 4:4; ரோமர் 2:29. நம்மை நாமே நம்புவதை உதறிவிட்டு, விசுவாசத்தோடு தேவனைச் சார்ந்திருப்பதை அது சுட்டிக்காட்டுகிறது.

ஆதியில் என்ன நோக்கத்திற்காக விருத்தசேதனம் கொடுக்கப்பட்டதோ அதை மறந்து, தேசத்தையும் மதத்தையும் அடையாளப்படுத்தும் ஒன்றாக, பவுலின் காலத்தினர் விருத்தசேதனத்தை முக்கியப்படுத்தினார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு 150 வருடங்களுக்குமுன், பலஸ்தீனாவில் வாழ்ந்த மதவெறியர்கள் சிலர் அங்கிருந்த யூதர்களை மாத்திரமல்ல, தங்களுடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்த தேசத்தார் அனைவருமே விருத்தசேதனம் பண்ணவேண்டுமென்று கட்டாயப்படுத்தினார்கள்; விருத்தசேதனம் இரட்சிக்கப்படுவதற்கான பயணச்சீட்டென்றும் சிலர் கருதினார்கள். முற்காலப் பழமொழிகளில் இந்தக் கருத்தைக் காணலாம். ‘‘விருத்தசேதனம் பண்ணப்பட்டோர் கெஹென்னா (நரகம்) செல்வதில்லை’’ போன்ற பழமொழிகள் அதற்கு உதாரணம்.

‘விருத்தசேதனத்தைப் பவுல் எதிர்த்தார்’ என்று நினைப்பதும் தவறு. புறஜாதிகளும் கட்டாயம் விருத்தசேதனம் பண்ணவேண்டும் என்பதைத்தான் பவுல் எதிர்த்தார். ‘நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால், இரட்சிக்கப்படமாட்டீர்கள்’ என்று கள்ளப்போதகர்கள் கூறினார்கள். அப் 15:1. பிரச்சனை இங்கு விருத்தசேதனம் அல்ல, இரட்சிப்பு. ‘கிறிஸ்துவை விசுவாசிப்பதால் இரட்சிப்பு கிடைக்கிறதா? அல்லது மனிதனின் கீழ்ப்படிதலின்மூலம் அது கிடைக்கிறதா?’ எனும் கேள்வி அங்கு எழுந்து நின்றது.

இன்று, விருத்தசேதனத்திற்கு முக்கியத்துவமில்லை. ஆனால், இதுபோன்ற வேறேதாவது பிரச்சனை நம் சபையில் காணப்படுகிறதா?

## வேற்றுமையில் ஒற்றுமை

**கலா 2:1-10 ஐ வாசியுங்கள். கள்ளச்சகோதரர் ''கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்தை உளவுபார்த்து, நம்மை நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக்கும் பொருட்டாகப் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்'' என்கிறார் பவுல். கலா 2:4. எவற்றிலிருந்து கிறிஸ்தவர்கள் விடுதலையாக்கப்பட்டிருக்கிறார்கள்? யோவா 8:31-36; ரோமர் 6:6,7; 8:2,3; கலா 3:23-25; 4:7,8; எபி 2:14,15. இந்த விடுதலையின் நிஜத்தன்மையை நம் வாழ்க்கையில் நாம் எவ்வாறு அனுபவிக்கலாம்?**

---

கிறிஸ்தவ அனுபவத்தில் முக்கியமான ஓர் அம்சம் விடுதலை. புதிய ஏற்பாட்டின் மற்ற எழுத்தாளர்களைவிட பவுல் இந்த வார்த்தையை அதிகம் பயன்படுத்துகிறார். மேலும் கலாத்தியர் புத்தகத்தில், விடுதலை, சுதந்திரம் எனும் வார்த்தைகள் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன. விடுதலை என்பது, கிறிஸ்துவுக்குள்ளான விடுதலையைச் சுட்டிக்காட்டுகிறது. அதனால், முற்றிலும் தேவனிடம் சரணடைந்து வாழ வழிபிறக்கிறது. நம் பாவத்தன்மையின் ஆசைகளில் அடிமைப்படுவதிலிருந்தும் (ரோமர் 6), நியாயப்பிரமாணத்தின் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்தும் (ரோம 8:1,2), மரணத்தின் வல்லமையிலிருந்தும் (1கொரி15:55) கிடைக்கிற விடுதலையும் இதில் அடங்கும்.

***'விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி பேதுருவைப் பலப்படுத்தினவர் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி பவுலையும் பலப்படுத்தினார்' என்பதை அப்போஸ்தலர்கள் உணர்ந்திருந்தார்கள். கலா 2:7. சபைக்குள் நிலவிய வேற்றுமை-ஒற்றுமைபற்றி இதிலிருந்து என்ன தெரிகிறது?***

---

யூதருக்கு நற்செய்தியைப் பிரசங்கம்பண்ண பேதுருவை தேவன் அழைத்தது போல, புறஜாதியாருக்கு நற்செய்தியை அறிவிக்க பவுலை தேவன் அழைத்திருந்தாரென்று அப்போஸ்தலர்கள் ஒத்துக்கொண்டார்கள். இரு சாராருக்கும் அறிவிக்கப்பட்ட நற்செய்தி ஒன்றுதான். ஆனால், நற்செய்தியைக் கேட்ட மக்களைப் பொறுத்து, அதைப் பிரசங்கித்தவிதம் அமைந்தது. கலா 2:7 இலிருந்து தெரிவது என்னவென்றால், ''பிரசங்கிக்கப்படுவது ஒரே காரியமாக இருக்கலாம். ஆனால், மக்கள் எவ்வாறு அதற்குச் செவிகொடுக்கிறார்கள், அது எவ்விதத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது அந்தந்தக் கலாச்சார, சமுதாயப் பின்னணியைப் பொறுத்து அமைகிறது... கிறிஸ்தவத்தின் இந்தத் தன்மைதான், வேற்றுமையில் ஒற்றுமையாகும்.'' - ஜேம்ஸ் டி.ஜி. டன்.

---

நம் 'பழக்கத் தோஷத்திற்கு' மாறானவிதத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்படும்போது, ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறோமா? சுவிசேஷம் அறிவிக்கப்படும்விதம் ஏதாவது உங்களுக்கு ஆட்சேபனையாக உள்ளதா? 'ஆம்' என்றால், அது என்ன? அவற்றின் எந்தக் காரியம் உங்களை உறுத்துகிறது? ஒருவேளை பரந்தமனம் தேவைப்படுகிறதா?

## அந்தியோகியாவில் எதிர்ப்பு (கலா 2:11–13)

அப்போஸ்தலர்களைக் கலந்தாலோசிப்பதற்கு, பவுல் எருசலேம் சென்று வந்தபின், சீரியாவிலிருந்த அந்தியோகியாவிற்கு பேதுரு செல்கிறார். அப்போஸ்தலர் புத்தகத்தில் சொல்லப்பட்டபடி, புறஜாதியருக்கென ஏற்படுத்தப்பட்ட முதல் சபை அங்குதான் இருந்தது; பவுலுடைய நற்செய்தி ஊழியத்தின் தலைமையகமாகவும் அது விளங்கியது. பேதுரு அங்கிருந்தபோது, புறஜாதிக் கிறிஸ்தவர்களோடு சாப்பிட்டார்; யாக்கோபு அனுப்பின யூதக்கிறிஸ்தவர்கள் சிலர் அங்குச் சென்றபோது, அவர்கள் தன்னைத் தவறாக நினைக்கக்கூடுமென நினைத்து, புறஜாதியாரோடு கலவாததுபோல் நடந்துகொண்டார்.

***பேதுரு எவ்வளவுக்குத் தெளிவுடன் இருந்திருக்கவேண்டும்? கலா 2:11-13 ஐ அப் 10:28 உடன் ஒப்பிடுங்கள். கலாச்சாரமும் சம்பிரதாயமும் நம் வாழ்வில் எவ்வளவு ஆழமாக வேர்விடக் கூடுமென்பதுபற்றி பேதுருவின் நடவடிக்கை தெரிவிப்பது என்ன?***

பேதுருவும் அவரோடிருந்த யூதர்களும் 'சுத்தமான உணவு, அசுத்தமான உணவு' பற்றிய பழைய ஏற்பாட்டின் விதிமுறைகளின்படி நடப்பதை நிறுத்திவிட்டதாகச் சிலர் தவறாக நினைக்கிறார்கள். ஆனால், அது உண்மையல்ல. யூதரின் உணவுவிதிகளை, பேதுருவும் யூதக்கிறிஸ்தவர்களும் கைவிட்டிருந்தால், சபையில் பெரும் பிரச்சனையே ஏற்பட்டிருக்கும். அது உண்மையானால், அது வேதாகமத்திலும் பதிவுசெய்யப்பட்டிருக்கும். அப்படி எதுவுமில்லை. புறஜாதியாரோடு சேர்ந்து சாப்பிட்ட காரியத்தில்தான் பிரச்சனை ஏற்படுகிறது. புறஜாதியார் தீண்டத்தகாதவர்களென்று யூதர்கள் பலர் நினைத்தார்கள்; எனவே, முடிந்த அளவிற்கு அவர்களோடு சமுதாயத் தொடர்பு இல்லாமல் பார்த்துக்கொண்டார்கள்.

இந்தக் காரியத்தில் பேதுருவுக்கும் போராட்டமிருந்தது; தேவன் கொடுத்த ஒரு தரிசனம்தான் தெளிவான கண்ணோட்டத்தை அவருக்குத் தந்தது. நூற்றுக்கதிபதியான கொர்நேலியு எனும் ரோமனுடைய வீட்டிற்குள் சென்றபின், 'அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்குவரவாயிருப்பது யூதனானவனுக்கு விலக்கப்பட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; அப்படியிருந்தும், எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார்' என்கிறார் பேதுரு. அப் 10:28. எனவே, காரியத்தைத் தெளிவாக அறிந்தபின்னரும், தன் இனத்தினரைப் புண்படுத்தாதிருக்க, தன் முந்தைய அபிப்பிராயங்களுக்கே திரும்புகிறார். பேதுருவின் வாழ்க்கையில் கலாச்சாரம் ஏற்படுத்தியிருந்த தாக்கம் பெரிதென்பது புரிகிறது.

பேதுரு மாய்மாலம்பண்ணினதாக பவுல் கூறுகிறார். கலா 2:13. 'அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான்' என்கிறார். ஒரு தேவமனிதன் இன்னொரு தேவ மனிதனைப்பற்றிச் சொல்லும் கடுமையான வார்த்தைகள் இவை.

எவ்வளவு எளிதில் மாய்மாலம் பண்ணிவிடுகிறோம்? பிறரில் தவறுகளைக் காணும் ஆசையில், நம் தவறுகளைக் காணக்கூடாதவர்களாக ஆவதில்லையா? உங்களுடைய வாழ்க்கையில் என்ன மாய்மாலம் காணப்படுகிறது? அதைக் கண்டுபிடித்து, வேரோடு அகற்ற என்ன செய்யலாம்?

வியாழன்
ஜுலை 13

## பவுலின் கவலை (கலா 2:14)

அந்தியோகியாவில் நிலை பதற்றமடைகிறது; சபைத்தலைவர்களான பேதுருவும் பவுலும் வெளிப்படையாக வாக்குவாதம்பண்ணுகிறார்கள். பேதுரு அவ்வாறு நடந்துகொண்டவிதத்துக்குக் காரணம்கேட்கிறார் பவுல்.

***பவுல் எல்லாருக்கும் முன்பாக பேதுருவைக் கேள்விகேட்டது ஏன்? கலா 2:11-14.***

---

எருசலேமிலிருந்து வந்தவர்களோடுசேர்ந்து சாப்பிட பேதுரு தீர்மானித்ததை பவுல் குறைசொல்லவில்லை. முற்காலக் கலாச்சாரத்தில் விருந்தோம்பல் முக்கியமானது; நிச்சயமாக பேதுரு அப்படித்தான் செய்திருக்கவேண்டும். ‘சுவிசேஷத்தின் சத்தியம்தான்’ இங்குக் கேள்விக்குறியாகிறது. சாப்பாட்டு நாகரிகமும், அன்யோன்யமும்மட்டும் பிரச்சனை அல்ல. நற்செய்தியின் மொத்தச் சத்தியத்திற்கும் இழுக்கு ஏற்படுத்தும்வகையில் பேதுருவின் நடவடிக்கை இருந்தது.

***பவுல் இவ்வாறு கடுமையாக நடந்துகொண்டதின் காரணத்தை அறிய கலா 3:28; 3:11இன் சத்தியம் எவ்வாறு உதவுகிறது?***

---

எருசலேமில் பேதுருவையும் பிற அப்போஸ்தலர்களையும் பவுல் சந்தித்தபோது,‘புறஜாதியார் விருத்தசேதனம்பண்ணவேண்டிய அவசியமில்லை. கிறிஸ்துவுக்குள்ளான சகல ஆசீர்வாதங்களையும் அவர்கள் அனுபவிக்கலாம்’ என்று ஓர் உடன்பாட்டிற்கு வந்திருந்தார்கள். ஆனால், பேதுருவின் நடவடிக்கை அந்த உடன்பாட்டைத் தகர்த்துவிடுவதுபோல் இருந்தது. யூதக் கிறிஸ்தவர்களுக்கும் புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கும் ஐக்கியம் நிலவிவந்த இடத்தில் இப்போது பிரிவினை உண்டானது; சபை இரு பிரிவாகப் பிரியக்கூடிய சூழல் காணப்பட்டது.

பேதுருவின் நடவடிக்கையானது புறஜாதியாரை இரண்டாந்தர விசுவாசிகள் போல் காண்பிப்பதாக நினைத்தார் பவுல். மேலும், யூதரோடு முழுதளவு ஐக்கியம் அவசியம்தானாவென்று புறஜாதியார் யோசிக்கக்கூடுமென்றும் உணர்ந்தார். எனவேதான்,‘யூதனாயிருக்கிற நீர் யூதர்முறைமையாக நடக்காதிருக்க, புறஜாதியாரை யூதர்முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக் கட்டாயம்பண்ணலாம்?’ என்று கேட்டார். கலா 2:14. ‘யூதர் முறைமையாக நடத்தல்’ என்பதை ‘யூதேயனாக்கு’ என்று மொழிபெயர்த்திருக்கலாம். தேவாலயத்திற்குச் சென்று யூதர்களுடைய சடங்குகளில் கலந்துகொள்பவர்கள் யூதேயரானதாகக் கருதப்பட்டார்கள். கலாத்தியாவிலிருந்த பவுலின் எதிரிகள், அதாவது, பவுலால் கள்ளச்சகோதரர் என்று குறிப்பிடப்பட்டவர்கள் இதனால்தான், ‘‘யூதேயராக்குகிறவர்கள்’’ என்று அழைக்கப்பட்டார்கள்.

---

பேதுரு மோசமாக நடந்துகொண்டது போதாதென்று பர்னபாவும் கூடச்சேர்ந்துகொள்கிறார்; இவரும் காரியங்களை நன்கு அறிந்தவர்தாம்; ‘கலாச்சாரத்தாக்கத்தின்’ விளைவு இது. நம்மைச் சுற்றிலும் உள்ளவர்கள் நிமித்தம் நாம் தவறான திசையில் செல்லாதபடி, நம்மை எவ்வாறு பாதுகாத்துக்கொள்ளலாம்?

## மேலும் படிக்க:



"சிறந்த மனிதர்கள்கூட தங்கள் விருப்பப்படி செயல்படநேரிட்டால், பெரும் தவறுகள் செய்யக்கூடும். மனிதனுக்கு அதிகப் பொறுப்பு கொடுக்கும்போது, பிறருக்குக் கட்டளையிடவும் பிறரைக் கட்டுப்படுத்தவும் கூடுதலான அதிகாரம் பெறுகிறான்; அப்போது நிதானத்தோடு ஆண்டவருடைய வழியை அவன் பின்பற்றாவிட்டால், இருதயங்களையும் சிந்தனைகளையும் புரட்டி, அதிக தீங்குசெய்வானென்பது நிச்சயம். அந்தியோகியாவில் நேர்மையின் நியதிகளிலிருந்து தவறினார் பேதுரு. அதனால் உண்டான மோசமான தாக்கத்தை நேருக்குநேர் பவுல் எதிர்க்கவேண்டியதாயிற்று. இந்தப் படிப்பினை மற்றவர்களுக்குப் பிரயோஜனப்படவும், உயர் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு இது ஓர் உன்னதமான எச்சரிப்பாக விளங்கவும், அவர்கள் நேர்மை நியதிகளில் தவறாமல் வாழவும் இச்சம்பவம் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது." – *6 SDABC, p.1108*.

## கலந்துரையாடக் கேள்விகள்

1. ஒருவர் தன்னை எதிர்த்துக் கேள்விகேட்பதை யாரும் விரும்புவதில்லை. ஆனால், சில சமயங்களில் இது அவசியமாகிறது. தங்களைச் சீர்ப்படுத்த மறுப்பவர்களை, எந்தச் சூழ்நிலைகளில் சபை கண்டித்துத் திருத்தலாம்?

2. உலகம்முழுவதிலும் செவந்-டே அட்வென்ட்டிஸ்ட் சபை வளர்ந்துவருகிறது. அதேநேரம் வேற்றுமைகளும் சபைக்குள் பெருகுகின்றன. இதன் மத்தியில் ஒற்றுமை பலியாகாமலிருக்க சபை என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்? 'ஒற்றுமையையும் காத்துக்கொள்ளவேண்டும்; கலாச்சார வேற்றுமைகளை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்'. இதை எவ்வாறு செய்வது?

3. வித்தியாசமான ஒரு கலாச்சாரத்தை உடையவர்கள்மத்தியில் நற்செய்தியைப் பிரசங்கிக்கும்போது, மாற்றம்செய்யக்கூடாத முக்கியக்கூறுகள் யாவை? மாற்றம்செய்யக்கூடியவை யாவை? எதை வைத்துக்கொள்ளவேண்டும்? எதை விட்டுவிடவேண்டும்? என்பதற்குள்ள வித்தியாசத்தை நாம் எவ்வாறு அறியலாம்?

**பாடச்சுருக்கம்:** கிறிஸ்துவின் மெய்ச்சீடர்களாக விளங்கவேண்டுமானால், புறஜாதியார் விருத்தசேதனம்பண்ணவேண்டுமென்று, யூதக்கிறிஸ்தவர்கள் சிலர் வற்புறுத்தினார்கள். ஆதிகாலச் சபையின் ஒற்றுமைக்கு இது பெரும் அச்சுறுத்தலாக இருந்தது. இந்தப் பிரச்சனையால் சபை இரு பிரிவினராகப் பிரிந்து, தனித்தனி இயக்கம் உருவாகாதிருக்க, அப்போஸ்தலர்கள் ஒன்றுசேர்ந்து பிரயாசப்பட்டார்கள். அவர்களுக்குள்ளும் கருத்துவேறுபாடு இருந்தது. ஆனாலும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது சுவிசேஷச் சத்தியத்தில் ஒற்றுமையாகவும் உண்மையாகவும் இருப்பதற்குப் பிரயாசப்பட்டார்கள்.

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,
டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)
## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.